**புளத்கொஹுபிட்டிய பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புளத்கொஹுபிட்டிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்குரிய ஏக்கர் வரி மிகைக் கட்டணம் ரூபா 53,707 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக காண்பிக்கப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளுக்குரிய நீதிமன்றத் தண்டப்பண பெறுவனவு ரூபா 2,122,264 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக திரண்ட நிதியம் குறைவாகவும், மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமதியால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் ரூபா 2,036,262 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் காண்பிக்கப்பட்டமையினால் திரண்ட நிதியம் குறைவாகவும் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் கடன்கொடுத்தோர் மிகை ஒதுக்கீடு ரூபா 232,522 ஆக இருந்த போதிலும், அது ரூபா 265,427 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையினால் திரண்ட நிதியம் ரூபா 32,905 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) கேகாலை மற்றும் றுவன்வெல்ல நீதிமன்றங்களிலிருந்து 2017 ஆம் ஆண்டிற்காகக் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,832,657 தொகை ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்படாமையினால் ஆண்டின் வருமானம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிந்தது.

(ஊ) பெறவேண்டிய கடை வாடகை ரூபா 635,550 தொகை கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக பெற வேண்டிய வருமானம் மற்றும் ஆண்டின் கடை வாடகை வருமானம் என்பன அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2017 ஆம் ஆண்டின் நிர்மாண உதவியாக கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 12,004,636 தொகையான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான சொத்துக் கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 75,130,089 ஆக இருந்த போதிலும், மூலதனத்திற்கான வருமானம் பங்களிப்புப் கணக்கின் மீதி ரூபா 75,161,289 ஆனமையால் வேறுபாடு ரூபா 31,200 ஆகும்.

(ஆ) 04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 5,948,375 ஆக இருந்த போதிலும், அதற்குரிய பட்டோலைகள் / அறிக்கையின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 8,227,642 ஆனமையால் வேறுபாடு ரூபா 2,279,267 ஆகும்.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,962,081 ஆகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,662,247 ஆகும்.

### 1.4 இனங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(ஆ) | 104,038 | சகல முற்பணமும் உரிய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2012, 2016, 2017 ஆம் ஆண்டுகளில் 04 |

| | | | |
|---|---|---|---|
| | | | சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(இ) | 161,500 | செயல்நிமித்த முற்பணம் உரிய பணி நிறைவு பெற்றவுடன் உடனடியாக எஞ்சிய தொகை அத்தினம் அல்லது அடுத்துவரும் வேலை நாட்களில் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது 10 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணம் 2018 சனவரி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 5,955 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 09 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 571 | 680,629 | 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | - | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களுக்காக 02 வருடம் முதல் 07 வருடம் வரையிலான காலத்தில் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2013 மார்ச் 31 ஆந் திகதிய 10/98(i) ஆம் இலக்க சபரகமுவ மாகாண பிரதம செயலாளரின் சுற்றறிக்கை | 9,815 | 04 உத்தியோகத்தர்களுக்குரியதாக அறவிட வேண்டிய பிணைப்பணம் குறைவாக அறவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,680,855 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,443,871 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,445,560 | 1,767,982 | 1,915,280 | 108,979 | 1,404,954 | 1,462,796 | 1,362,586 | 201,599 |
| வாடகை | 1,757,300 | 1,966,217 | 1,442,752 | 523,465 | 1,448,400 | 1,736,745 | 1,736,745 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 362,700 | 259,532 | 259,532 | - | 322,000 | 238,886 | 255,126 | - |
| ஏனைய வருமானம் | 38,612,644 | - | 27,503,624 | - | 35,555,131 | - | 25,937,354 | - |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்தபோது வீதவரியும் வரியும் 32 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்கள் முறையே 18, 28 மற்றும் 27 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

### 2.2.3 வீதவரியும் வரியும்

சபைக்குரிய ஆதனவரி ஆதனங்கள் 2009 ஆம் ஆண்டின் போது யட்டியாந்தோட்டை பிரதேச சபையிலிருந்து கையேற்கப்பட்டிருந்ததுடன் 1,620 ஆதனவரி அலகுகளுக்கிடையே 640 அலகுகள் 2016 ஆம் ஆண்டு முதல் புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய 980 அலகுகளிலிருந்து தொடர்ந்தும் 2009 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவெண்டிய 04 கைத்தொழில்களுக்குரிய பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படாதிருந்ததுடன், அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 வியாபார நிறுவனங்களுக்குரிய மீளாய்வாண்டிற்கான வியாபார வரியை அறவிடுவதற்கு சபை நடடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை

புளத்கொஹுபிட்டிய நகரத்தில் வாராந்த சந்தை வளவை அபிவிருத்தி செய்தல் 2014 சனவரி மாதத்தின் போது அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலம், 2018 மே வரையிலும், அந்த வாராந்த சந்தை நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வாராந்த சந்தையை நடாத்துவதற்காக நாளொன்றிற்கு ரூபா 5,000 வீதம் செலுத்தி நிலமொன்றை வாடகைக்கு எடுப்பதற்கு மீளாய்வாண்டில் ரூபா 260,000 செலவிடப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் வரை ரூபா 980,000 செலவிடப்பட்டிருந்தது.

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 22,000 பெறுமதியான இரண்டு பொருள் வகைகளின் பற்றாக்குறையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2017 இன் பாதீட்டின் மூலம் ஏற்படுத்தப்பட்ட நிதிஏற்பாடுகளில் 82 சந்தர்ப்பங்களின் போது ரூபா 27,917,400 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 21 செலவின விடயங்களில் 76 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 130,940,550 ஆக இருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) நாட்குறிப்புப் பதிவுகளில் எண்ணிக்கை பிழையாக இருந்தமை. |
| | (ii) பட்டோலைகள் கணக்குகளுடன் இணங்காமை |
| | (iii) நீண்ட காலமாக பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | (iv) வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறைத்தும் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டமை |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை. |
| | (ii) மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) வருமான நிர்வாகம் | (i) ஆதனவரி அறவிடுவதற்காக அபிவிருத்தியடைந்த பிரதேசம் இனங்காணப்படாமை |
| | (ii) நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) வாகனப் பயன்பாடு | (i) நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிப்பதில் தாமதம் |
| | (ii) வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளாமை |
| | (iii) சபை பயன்படுத்தப்படுகின்ற ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| | (iv) குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் காணப்பட்டமை. |